முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குரு பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

01.02.2019, வெள்ளிக்கிழமை

1. **ஆன்ம பலம் ஊட்டும் ஞானத்தை**
**அகத்தியர் சன்மார்க்கம் கொண்டு**
**நன்மைபட சுத்தநெறி காட்டி**
**ஞானபண்டிதன் சூட்சும சக்தியாக அருளும்**

2. அருளும் ஆறுமுக அரங்கா
அகிலமதில் உன் பெருமை கூறி
அருளுவேன் ஒளி சூட்சும நூலை
ஆற்றல்பட **விளம்பி கலை திங்கள்**

3. **திங்களிலே மூவாறு திகதி புகர்வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 18ம் நாள் 01.02.2019, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு குருபகவான் யானும்**
ஓங்காரன் தலைமை கொண்டநல்
உயர் ஞானயுகம் அமைய உரைப்பேன்

4. உரைக்கவே சரவண சுடரேற்றி
உபதேசம் ஞானவழி காட்டும்
குறைபடா தரும பலமும் கூட்டும்
குருராசன் அரங்கமகா ஞானியே

5. ஞானியே கலியுகத்தில் உயர்குரு
ஞானிகளும் வானவர்களும் மெச்ச
தானதருமம் வளர்க்கும் ஞானகுரு
தவசியரின் சொல் ஆட்சி எல்லாம்

6. எல்லாம் உயர் வேதங்களும் ஆகும்
எல்லா மக்களின் சமத்துவ நலம் கருதி
வல்லமைபட சமதர்மம் அருளி
வரம் பெற்று காக்கும் ஞானியே

7. ஞானியே ஞானயுகம் படைக்கும்
ஞானபண்டிதன் அவதார குரு
ஞானிகளின் பூசையாக செய்து
ஞானசக்தி பெருக்கி தொண்டு வழி

8. தொண்டு வழி தொண்டர் படைகளை
திருவருளை கூட்டி வளர்த்து
தொண்டு வழி மக்களை தேற்றி
தெய்வீகம் பரப்பி மக்களுள்ளே

9. மக்களுள்ளே மாதருமவானை தேடி
மகா ஞானியாக தேர்வு செய்து
ஊக்கமுடன் யுகமாற்ற வேலை
உயர் சேவையாக செய்யும் அரங்கனே

10. அரங்கனே உன்னுள் குருபகவானும்
ஆற்றலாக பரவி உள்ளேன்
வரங்கள் கேட்டு உன்பால்
வரும் மக்கள் அனைவருக்கும்

11. அனைவருக்கும் உன் கரம்பட
அருளாசிபட என் துணை கிட்டும்
அனைவருக்கும் நற்பலன்களே எட்டும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் வியாழபகவான் (குருபகவான்) அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலக மக்களுக்கு ஆன்மபலத்தினை உண்டாக்கும் ஞானத்தினை ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்கத்தின் மூலமாக மிகவும் நன்மை விளைவிக்கும் விதத்தினிலே எளிமைபட தூயநெறியை மக்களுக்கு அருளி ஞானபண்டிதன் முருகப்பெருமானின் சூட்சும சக்தி வடிவமாக அவதரித்து அருள் செய்து காக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 18ம் நாள் 01.02.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே குருபகவானாகிய யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குருபகவானாகிய வியாழபகவான்.

முருகப்பெருமானின் தலைமையில் கலியுகம் மாறி ஞானம் செறிந்த உயர் ஞானயுகம் அமைந்திடவே இந்த நூலை உலகோர் அறிய உரைக்கின்றேன்.

சரவணஜோதி சுடரினை ஏற்றி வைத்து மக்கள் கடைத்தேறிட சரவணஜோதி வழிபாடுகளை செய்திட தூண்டுவதுடன் நல்ஞான உபதேசங்களை அருளி ஞானவழிதனை காட்டி குறையற்ற தருமபலத்தினையும் பெருக்கிடும் குருராஜன் ஆறுமுக அரங்கமகா தேசிகனே மகா ஞானியே கலியுகத்தின் உயர்ஞான குரு ஆவார்.

ஞானிகளும் வானவர்களாகிய தேவர்களும் போற்றி புகழும்படியான வகையிலே தானதருமங்களை அளவிலாது வளர்க்கின்ற ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிக மகா ஞானகுரு, உயர் ஞான தவசி சொல்லும் சொல்லனைத்தும் உயர் ஞான வேதங்களாகும். சொல்லும், செயலும் என எல்லாமே உயர்வான வேதங்களாகும், மக்களிடையே வேறுபாடுகள் மறைந்து சமத்துவம் மலர்ந்திட வேண்டுமெனக் கருதி வல்லமையுடன் சமதர்மத்தை உலகிற்கு அருளி சகல வரங்களையும் பெற்று உலகைக் காக்கும் மகா ஞானி ஆறுமுக அரங்கனே இவ்வுலகினில் ஞானயுகம் படைக்கின்ற ஞானபண்டிதனின் அவதாரமாக வந்திட்ட மகா ஞான குருவாகும்.

அத்தகைய ஞானகுரு ஆறுமுக அரங்கன் ஞானிகளை வணங்கி ஞானபூஜைகளை செய்து ஞானசக்தினை பெருக்கி தொண்டுகள் மூலமாக உலகினில் தொண்டர் படைகளை அமைத்து அளவிலாது தொண்டுகளைச் செய்து மக்களிடையே திருவருளாம் தெய்வீக சக்தியை பெருக்கி தொண்டுகள் மூலமாக மக்களைக் கடைத்தேற்றி உலக மக்களுக்கு தெய்வீக நிலையை பரப்பி மக்களை தானதருமங்களை செய்திட செய்து தொண்டுகள் மூலம் தர்மங்கள் மூலம் சக்தியடைந்த மாதருமவான்களை தேடி கண்டுபிடித்து அவர்களை மகா ஞானியாக தேர்வு செய்து ஊக்கமுடன் யுகமாற்ற சேவைகளை உயர் ஞான சேவைகளாக செய்து வருகின்ற அரங்கமகா தேசிகனே உம்முள் குருபகவான் யானும் ஆற்றலாக பரவி உள்ளேனப்பா.

ஆதலினாலே வரம் பெறுவதற்காக வரங்கள் கேட்டு உமது திருவடி பணிந்து வணங்கி வரும் மக்களுக்கு எல்லாம் உன் கரம்பட்ட அவர்க்கெல்லாம் உமது அருளாசி பெற்ற அவர்க்கெல்லாம் குருபகவான் எமது அருளாசிகளுடன் எனது துணையும் அவர்களுக்கு கிட்டும் எமது அருள் துணை பெற்ற அனைவருக்கும் எக்காலத்தும் நற்பலன்களே என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குருபகவானாகிய வியாழபகவான்.

–சுபம்–